முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1262

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.03.2023, செவ்வாய்கிழமை

1. அறமெனும் சக்தியாய் கலியுகத்தில்
அற்புதத்தை நடத்துகின்ற அரங்கா வாழ்க
வரம்தந்து ஆறுமுகன் யானும் உன்னுள்ளே
வல்லமைபட இறங்கி அருள்செய்ய
2. செய்யவே அரங்கனுக்கு இன்னும்சக்திகூட
செப்பிடுவேன் ஞான அறிவுரைஆசி
(சுபகிருது வருடம் மாசி மாதம் 30 ம் நாள், 14.03.2023, செவ்வாய்கிழமை)
தரமான தொண்டர்படைகளைக் கொண்டு
தர்மபலம் உலகமெல்லாம் ஆற்றுகின்ற
3. ஆற்றுகின்ற அரங்கனே உன் சக்தியே
அகிலத்தை மாற்றி காத்தருளும்
மாற்றம் செய்து உன் கொள்கையே
மக்களையெல்லாம் ஞானவான்களாக ஆக்கி இனிதே
4. இனிதே உலகமாற்றம் நடத்தி அருளும்
இந்தவித மகா சக்திக்குள் உலகோர்
உலகோர் தானாக சரணாகதி கொண்டு
உன் குடில் தொடர்பைக் கூட்டி இனிதே
5. பழகவேண்டும் அன்னதான சேவையிலே
பரிபக்குவம் தானாக இதன்வழி கூடி
கூடியே அனைவரும் ஞானியாக
குருபரன் என் அருளம் தயவும் நாடி நிற்கும்
6. நிற்கவே அரங்கன்வழி தீட்சைபெற்று
நிலவுலகில் வாழுகின்ற மக்களெல்லாம்
அற்புதம்பட ஞானிகள் ஆசிகூடி
அவரவரும் அரங்கன் வழிகாட்டல் மூலம்
7. மூலமாக ஞானியாவது உறுதியப்பா
முழுமைபட உலகமெல்லாம் ஞானிகள்படை
கோலமதாய் பெருகிபெருகி இனிதே குவலயமே ஞானிகள் ஆட்சிக்காலமாக
ஆகவே மாற்றம்பெறும் சடுதிதானே அரங்கனால் இந்தஅற்புதம் அரங்கேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–